# பொள்ளாச்சி நகராட்சி
## 31.05.2019 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட தீர்மானம்

1578) தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110ன் கீழ் 19.06.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின் பேரில் அரசாணை எண். 198 உயர்கல்வித் துறை நாள் 24.07.2017 ஆணையின்படி ஏழை மாணவர்களின் நலன் கருதி பாரதியார் பல்கலைக்கழகம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (உறுப்பு) 2017-2018 ஆம் கல்வி ஆண்டு முதல் கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் புதிதாக துவங்க அனுமதி வழங்கப்பட்டுளளதாக தெரிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் நகராட்சிக்குச் சொந்தமான சுமார் 10.50 ஏக்கர் இம் சர்வே வார்டு எண் E, பிளாக் எண்.24, நகரளவு எண் .32 பகுதியில் செயல்பட்டு வரும் சமத்தூர் இராம ஐயங்கார் நகராட்சி மேல்நிலைப்பள்ளி, மகாலிங்கபுரத்தில் உள்ள பள்ளி வளாகத்தில் தற்போது செயல்பட்டு வரும் பள்ளி உபயோகம் தவிர்த்து காலியாக உள்ள வகுப்பறைகள் மற்றும் காலியிடங்கள் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களால் 13.08.2017 அன்று திறக்கப்பட்டு கல்லூரி செயல்பட்டு வருகிறது.

நகர்ப்புறம் மற்றும் சுற்றுப்பபுற மாணவ-மாணவியர்களின் நலன் கருதியும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதியை எதிர் நோக்கியும் வகுப்புகள் நடைபெற அனுமதிக்கப்பட்டது. நகர்மன்ற தீர்மானத்தின் படி ரூ.65267/- வாடகை நிர்ணயிக்கப்பட்டு செலுத்தக் கோரி கடிதம் அனுப்பப்பட்டது.

இந்நிலையில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமானதாலும், வகுப்புகள் விரிவுபடுத்துவதற்காக பாரதியார் பல்கலைக்கழக கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வரின் 20.07.2018 ஆம் தேதிய கடிதத்தின்படி கூடுதல் வகுப்பறைகள் கோரியதன் பேரில், அதற்கும் சேர்த்து மொத்த வாடகையாக பொதுப்பணித்துறை மற்றும் சார் பதிவாகளர், பொள்ளாச்சி அவர்களின் வழிகாட்டு மதிப்பின்படி ரூ.75640/-(மாதம் ஒன்றுக்கு) என நிர்ணயிக்கப்பட்டு பொறியாளர் பிரிவின் மூலம் குறிப்பு பெறப்பட்டுள்ளது. நகர்மன்றத் தீர்மானத்தின்படி மேற்கண்ட வாடகையினை 01.08.2018 முதல் நிர்ணயம் செய்ய, நகராட்சி நிர்வாக அணையர் அவர்களின் அனுமதி பெற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உரிய கருத்துருக்கள் மற்றும் இணைப்புகளுடன் கடிதம் அனுப்பப்பட்டது. செயல்முறை உத்திரவில் வாடகையாக ரூ.79450/- மாதம் ஒன்றிற்கு நிர்ணயம் செய்து வசூல் செய்யவும் அடுத்த மூன்றாண்டிற்கு ஒரு முறை புதுப்பித்து வாடகையினை 15% உயர்வு செய்து வசூல் செய்யவும் சில நிபந்தைகளுக்குட்பட்டு உத்திரவு வரப்பெற்றது.

அதனடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் மாண்புமிகு பேரவை துணைத் தலைவர், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை, தலைமைச் செயலகம், சென்னை அவர்கள் கட்டடிம் கட்டுவதற்காக ரூ.7.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அதன்பேரில் தற்போது வாடகை அடிப்படையில் செயல்பட்டு வரும் கல்லூரி கட்டிடத்திற்கு அருகில் காலியாக உள்ள சுமார் 4.00 ஏக்கர் இடத்தினை தற்போதைய அரசு வழிகாட்டி மதிப்பின்படி விலை நிர்ணயம் செய்து தெரிவிக்கும்பட்சத்தில் உரிய தொகையினை பெற்றுக் கொண்டு நில உரிமை மாற்றம் செய்து தரவும், தற்போது கல்லூரிக்கு கட்டிடம் கட்டிக்கொள்ள முன் நுழைவு அனுமதி வழங்குமாறும் தெரிவித்துள்ளார்கள்.

எனவே, நகராட்சிக்கு சொந்தமான பள்ளி வளாக இடத்தின் தெற்குப்புற 40’ அடி D1-D1 சாலையை ஒட்டி கிழக்குப்பக்க காலியிடத்தில் சுமார் 4.00 ஏக்கர் இடத்தினை பாரதியார் பல்கலைக்கழக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு (உறுப்பு), மாணவ

மாணவியர்களின் நலன் கருதி நகராட்சி பள்ளி வளாக இடத்தினை கல்வி உபயோப பயன்பாட்டிற்கு பயன்படுத்த கோரியிள்ளதாலும், பள்ளி வளகாத்திலுள்ள காலி இடத்தின் ஒரு பகுதியினை அரசாணை (நிலை) எண் 25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி5) துறை நாள் 25.02.2000ல் குறிப்பிட்டுள்ளவாறு அப்போதைய சந்தை மதிப்பின்படி (Market Value at the time) நிர்ணயிக்கும் தொகையை செலுத்தும் பட்சத்தில் நில உரிமை மாற்றம் செய்து தல ஆட்சேபணை ஏதுமில்லை என்ற நிபந்தனையின் அடிப்படையில் முன் நுழைவு அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.3682/2017/ஜி1**